2003 மார்ச் 28]

127—

வேலை வாய்ப்பு

•18464—திரு. பி.கே. சேகர்பாபு:

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, வியாசர்பாடி பகுதியிலுள்ள தொழு நோயாளிகளின் குழந்தைகளில் சுமார் 100 பேர் தொழிற்கல்வி/பட்டப் படிப்பு படித்துள்ளவர்களுக்குத் தனியார் அல்லது அரசு சார்பு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத்தர அரசு தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தொழுநோயாளிகளின் குழந்தைகள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தால், அவர்களது கல்வித் தகுதி, வயது, பதிவு மூப்பு மற்றும் இட ஒதுக்கீடு ஆகியவற்றின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அறிவிக்கப்படும் காலியிடங்களுக்கு அவர்களது பெயர்கள் பரிந்துரை செய்யப்படும்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை இந்தச் சமுதாயமானது, ஒதுக்கப்பட்டவர்களாகக் கருதி நடத்துவதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையில் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் நேர்முகத் தேர்வுக்குப் பரிந்துரைக்கப்படும் என்பதைத் தெரிவித்திருக்கிறார். அப்படி இடஒதுக்கீட்டைப் பின்பற்றுகிறபோது இவர்கள் ஊனமுற்றோர் பட்டியலின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்களா அல்லது ஜாதி அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்களா என்பதை அறிய இருக்கின்ற அதே நேரத்தில், இப்படி தொழுநோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றவர்களின் பிள்ளைகள் படித்திருக்கின்ற, இந்தப் படிப்பினை முன்னுரிமையாகக் கொண்டு அவர்களுக்கு

அரசாங்கத்திலேயும் முன்னுரிமை அடிப்படையில் வேலை அளிக்கின்ற அதேநேரத்தில், தனியார் நிறுவனங்களிலும் இவர்கள் பணியில் சேருவதற்கு அவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற அதேநேரத்தில், இவர்கள் தொழிற் கல்வி பயின்று இருப்பதால், சொந்தமாகத்தொழில் நடத்துவதற்கும், வங்கியிலே கடனுதவி பெறுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிந்துரைப்பார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழுநோயாளிகளின் குழந்தைகள் அவர்கள் விரும்பினால் அரசினர் மகளிர் காப்பகங்களில், அதாவது சமுகநலத் துறையின் சார்பில் நடத்தப்பெறுகின்ற அரசினர் மகளிர் காப்பகங்களிலே அவர்களைத் தங்க வைத்து முழுமையாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அவர்களின் படிப்புச்செலவை எஸ்எஸ்எல்சி. வரை ஏற்றுக்கொள்கிறது. அவர்களுக்கு உணவு, உடை, தங்குகின்ற இடம், மருத்துவ வசதி போன்ற எல்லா வசதிகளும் அளிக்கப்படுகின்றன. அவர்களில் உடல் ஊனமுற்றவர்கள் இருந்தால், அல்லது உடல் ஊனமுற்றவர்களாக இருக்கிறார்கள் என்று சான்றிதழ் பெற்று வந்தால், அதற்குரிய இடஒதுக்கீட்டை அவர்களுக்கு வழங்குவதற்கு அரசு உரிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. இது தவிர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப்போல, அவர்களுக்கு உதவுகின்ற வகையில் தனியார் நிறுவனங்களில் பணியமர்த்தம் பெற்றுத் தருவதற்கு இந்த அரசு நிச்சயமாக முயற்சி செய்யும். அப்படி தனியார் நிறுவனங்களில் நம்முடைய மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் பணியமர்த்தங்கள் இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

முற்பகல் 10-40

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கின்ற இந்தக் குறிப்பிட்ட பகுதியில் வாழுகின்ற அந்தத் தொழுநோயாளிகளினுடைய குடும்பத்தில் இருக்கின்ற, படித்த வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற அந்தப் பகுதியினருக்கு தனியார் துறைகளில் பணியமர்த்தம் பெற்றுத் தருவதற்கு அரசு தன்னால் ஆன எல்லா முயற்சிகளையும் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2003 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுரையிலே இப்படி தொழிற் கல்வி பயின்று இருக்கின்ற தொழுநோயாளிகளுடைய பிள்ளைகளுக்கு வங்கிகளிலே அவர்கள் தொழில் செய்வதற்குப் பரிந்துரைப்பார்களா என்று கேட்டிருந்தேன். அதற்கு, இவர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்தில் அனாதை இல்லங்களில் இப்படி தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்வதாகக் கூறியதால், விதவை, முதியோர்களுக்கு வழங்குவதைப்போல, இவர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்படுகிறதா? அப்படி வழங்கப்பட்டால், இவர்களுக்கு எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது? அப்படி வழங்கப்படுகின்ற நேரத்தில் இந்தத் தொழுநோயாளிகளுக்கு முதியோர், விதவைகளுக்கு வழங்கப்படுவதைப்போல் வயது வரம்பை நிர்ணயிக்காமல், அவர்களுக்கும் அரசாங்கத்தின் சலுகைகளின் அடிப்படையில், தகுதிகளைத் தளர்த்தி உதவித்தொகை வழங்க அமைச்சர் அவர்கள் பரிந்துரைப்பார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழுநோயை இந்தியாவிலேயிருந்து விரட்டவேண்டும் என்பது இந்திய அரசு, மாநில அரசினுடைய கொள்கை. அந்தவகையிலே நூற்றுக்கு நூறு சதவிகிதம் தொழுநோயை ஒழிக்கவேண்டும் என்று முயன்று, பெரும்பாலும் அதில் நம்முடைய அரசு வெற்றி கண்டிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல் வங்கிகளிலே தொழில் செய்வதற்கு அவர்கள் மனு செய்வார்களேயானால், அது அரசின் கவனத்திற்கு எடுத்து வரப்படுமேயானால் உரிய வங்கிகளுக்கு, அவர்களுக்கு உதவி செய்ய அரசு பரிந்துரை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கே. மகேந்திரன் அவர்கள்.

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வேலை நியமனத் தடையாணை இருக்கக்கூடிய காரணத்தினால், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பணிமூப்பு அடிப்படையிலே, இடஒதுக்கீடு அடிப்படையிலே.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனிக் கேள்வி போடுங்கள். சம்பந்தம் இல்லை.

வினா எண் 128, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

128—

மாணவர்கள் சேர்க்கை

***23230—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர்கள் சேர்க்கைக்கு 10 ஆம் வகுப்புத் தேர்வில் தோல்வியடைந்த மாணவர்களையும் சேர்த்துக் கொள்ளும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

10 ஆம் வகுப்பு தேர்வில் தோல்வியடைந்த மாணவர்களை அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்த்துக் கொள்ளும் திட்டம் இப்போது நடைமுறையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்குக்கூட, 75 சதவிகிதம் மாணவர்களுக்கு இப்போது நம்முடைய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலே இடம் கிடைப்பதில்லை. அதிலேகூட, 80, 75 சதவிகிதம், பொதுவாக ஃபிட்டர், வெல்டர் போன்ற நல்ல டிரேடுகளுக்கு எல்லாம் இப்போது அவ்வளவாக இடம் கிடைக்ககூடிய சூழ்நிலை